சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS** 76/2021

2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 09-ம் நாள் Pw தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கராஜ் | ஜாதி | |
| த.க.பெயர் | கொழந்தசாமி | மதம் | |
| கிராமம் | பெருந்துறை | தொழில் | |
| மாவட்டம் | | வயது | 56 |

**வா.சா.1 நாள் 09.11.2023.**

**முதல் விசாரணை:** (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

வா.சா.1 ஆகிய நான் வழக்கின் வாதி. என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

1) 05.02.1990 ல் என் அப்பா கொழந்தசாமி கவுண்டர் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் வாசாஆ 1.

2) என் அப்பா 21.03.2000 தேதியன்று எழுதி பதிவு செய்துள்ள உயில் அசல் வாசாஆ 2. (மேற்படி ஆவணம் இந்த சாட்சி மூலம் குறியீடு செய்ய இயலாது என்று பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது)

3) கருமாண்டிசெல்லிபாளையம் கிராமம் புல எண் 478/11 ஈ சம்பந்தப்பட்ட சிட்டா நகல் வாசாஆ 3.

4) கருமாண்டிசெல்லிபாளையம் கிராமம் புல எண் 478/11 ஈ அடங்கல் எக்ஸ்டிராக்ட் நகல் வாசாஆ 4.

5) என் அப்பா பெயரில் வரி விதிப்பு எண் 8716 மற்றும் 8718 ஆகியவற்றிற்கு 06.03.2019 ல் வரி செலுத்தியதற்கான சொத்து வரி ரசீது( 2 எண்ணிக்கை ) வாசாஆ 5.

6) என் அம்மா வள்ளியம்மாளின் இறப்பு சான்று ஆன்லைன் நகல் வாசாஆ 6.

(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishnapriya, 09.11.23
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS